Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd. TN/CC(S)Dn/326/13-15    Date of Publication 25th of Every Month

பெண்கள் உபவாச கூட்டம்
வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில்
காலை 10 முதல் 12 மணி வரை
சகோதரிகள் கலந்து கொள்ளுங்கள்.






Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# நிஜ எக்காளம்

Vol. 7 / Issue. 5 / பிப்ரவரி 2014 / ரூ.20



# பரிசுத்தம்

# பரிசுத்தம்

- சகோதரி நிஜா கென்னடி

உங்களை அழைத்தவர் **பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்** என்று எழுதியிருக்கிறதே (1 பேதுரு 1:15,16). நம்மை அழைத்த தேவன் பரிசுத்தமுள்ளவர். நாம் ஒவ்வொருவரும் பரிசுத்தமாக, கறையற்றவர்களாக அவரைப்போல வாழ விரும்புகிறார். நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும், நடத்தைகளிலும், வாழ்க்கை முறையிலும் பரிசுத்தமுள்ளவர்களாக, நல்லொழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

அநேகர் கர்த்தருக்கு தங்களுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தபின்பு, மறுபடியும் தங்கள் பழைய வாழ்க்கைக்குத் திரும்பி விடுகிறார்கள். சிலர் கொஞ்ச காலம் மட்டும் பரிசுத்தமாய், தேவனுக்கு பிரியமாய் வாழ்வார்கள், பின் கொஞ்சம் கொஞ்சமாக வழி விலகிச் சென்று பழைய பாவங்களுக்கு இடங்கொடுப்பார்கள். **ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின** (2 கொரிந்தியர் 2:17) என்ற வார்த்தையின் படி பழைய பாவசுபாவங்களை நம்மை விட்டு அகற்றி, தேவன் விரும்பும் பரிசுத்த வாழ்க்கையை வாழவேண்டும். தேவனை விட்டு விலகச் செய்யும் பாவங்களை நாம் செய்யக்கூடாது.

தேவனை மிகவும் நேசித்து தங்களை முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணித்து, அவருக்கு உண்மையாய் இருப்பதே பரிசுத்தம். பாவத்திற்கு இடங்கொடுக்காமல், பாவம் நம்மை ஆளுகை செய்யாதபடி இருதயத்தை பரிசுத்தமாக காத்துக்கொள்ள வேண்டும். தேவனது குணநலன்கள் நம்மிலிருந்து வெளிப்படும்போது, அவை மற்றவர்களிடமிருந்து நம்மை வேறுபிரித்து காண்பிக்கும். ந.ம் கவனம் முழுவதும் தேவன்மேல் இருக்கும் கர்த்தருக்கே முதலிடம் கொடுப்போம். நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டபின் நமது சுபாவங்கள் பழைய சுபாவங்களுக்கு நேர் எதிர்மாறாக முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். நாமாகவே பரிசுத்தமாக இருக்க முடியாது. தேவன் நமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளி, நாம் கீழ்ப்படிந்து நடக்கவும், பாவத்தை மேற்கொள்ளவும், அவரது வல்லமையை தருகிறார். பாவத்தின் பிடியிலிருந்து வெளிவர தேவ வல்லமையைப் பெற்றுக் கொள்வோம்.

நாம் பாவத்திற்கு விலகியிருந்து, தேவனைப்போல முழுமையாக பரிசுத்தமாக வாழ விரும்ப வேண்டும். இயேசு கிறிஸ்து எந்த பாவமும் செய்யவில்லை. அவருடைய வாயிலிருந்து எந்த பொய்யும் வெளிவரவில்லை. அவர் பொய் சொன்னதேயில்லை. பேதுரு, இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களின் (விசுவாசிகளின்) செய்கையும், பண்பும் குற்றமற்றதாக இருக்கவேண்டும் என்று போதிக்கிறார். பரிசுத்தருக்கு ஏற்றபடி பரிசுத்தர்களாக வாழவேண்டும் என்றும், இத்தகைய பண்பின் விளைவு கீழ்ப்படிதல் நிறைந்த வாழ்வாக இருக்கும் என்றும் கூறுகிறார்.

**பிரியமானவர்களே, மாம்சத்தினாலும், ஆவியினாலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்** (2 கொரிந்தியர் 7:1). பூரணமான பரிசுத்தம் என்பது, நாம் பாவத்தை விட்டு விலகி, தேவனுக்கு நேராக திரும்ப வேண்டும். பழைய பாவங்கள் நம்மை ஆளுகை செய்ய விடாமல், அதை அடக்கி முற்றிலுமாக தேவன் நம்மை ஆளுகை செய்யும்படியாக அவருக்கென்று அர்ப்பணிக்க வேண்டும். நமது மாம்சத்திலும், ஆவியிலும் இருக்கிற அசுத்தமான பாவக்கறைகள் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். அனுதினமும் பரிசுத்த ஜீவியத்தில் முன்னேறிச் செல்ல வேண்டும். **பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்** (வெளி 22:11).

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, அனுதினமும் இயேசுகிறிஸ்துவைப் போல மாறிக்கொண்டேயிருப்பது. இயேசு கிறிஸ்து வரும்வரை நாம் பரிசுத்தமாகிக் கொண்டேயிருக்க வேண்டும். பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைய வேண்டும். பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளவேண்டும். **அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்** (1 யோவான் 3:3). இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்போது, நாம் அவரைப்போல இருப்போம். இயேசு கிறிஸ்து சுத்தமுள்ளவர். கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப்போல தன்னை சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.

**அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை; அவரை அறியவுமில்லை** (1 யோவான் 3:6). பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவங்கள் கழுவப்பட்டு, தேவனுடைய பிள்ளையாக மாறும் ஒவ்வொருவரும் பாவத்தை தொடர்ந்து செய்யமாட்டார்கள். நாம் செய்யும் காரியங்களிலிருந்தே நாம் தேவனுடைய பிள்ளைகளா அல்லது பிசாசின் பிள்ளைகளா என்பதை அறிந்து கொள்ளலாம்.

**அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாய்ப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்** (1 யோவான் 2:5). நாம் சுயநலமில்லாமல் இருந்தாலே அன்பு நம்மிலிருந்து வெளிப்படும். ஒருவரை ஒருவர் நேசிப்போம். மற்றவர்களுக்கு விரோதமாக தீமையான காரியங்களை செய்யமாட்டோம். நம்மைக்குறித்து மட்டுமே சிந்திக்காமல் மற்றவர்களைக் குறித்து யோசிப்போம். குடும்பத்தில் மனைவி கணவனுக்கு விரோதமாகவும், கணவன் மனைவிக்கு விரோதமாகவும் துரோகம் செய்யமாட்டார்கள்.

சுயத்தை வெறுத்து மற்றவர்கள் நலனைக் கருத்தாகக் கொண்டு, நன்மை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். குடும்பம் முன்னேறுவதற்கு, குடும்பத்தின் ஆசீர்வாதத்திற்கு தடையாக இருக்கும் பரிசுத்த குறைச்சலை அகற்றவேண்டும். சுயநலக்காரர்கள் தங்களைக் குறித்தே சிந்தித்துக் கொண்டு தங்களை திருப்தி செய்யவே வாழ்வார்கள். குடும்பத்தில் உள்ள மனைவி (கணவன்) பிள்ளைகள் நன்றாக வாழவேண்டும் என்கிற எண்ணம் அவர்களுக்கு இருக்காது. தங்கள் சுய இச்சையை நிறைவேற்றுவதிலேயே குறியாயிருப்பார்கள். தாங்கள் செய்கிற பாவத்தினால்தான் தங்கள் குடும்பத்திற்கு ஆசீர்வாதம் தடையாக இருக்கிறது என்பதை உணராமல், (தேவனுக்கும், உலகத்துக்கும்) ஊழியம் செய்வார்கள். மாம்ச இச்சையைக் கட்டுப்படுத்த

முடியாமல் பிசாசுக்கு அடிமையாய் இருப்பார்கள். **எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும், உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றார்** (லூக்கா *16:13*).

நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக, உப்பைப்போல சுவை கொடுக்கிறவர்களாக, உலகத்திற்கு வெளிச்சமாக, தேவன் நம்மிலிருந்து வெளிப்படும்படியாக தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக வாழவேண்டும். தேவனுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனிடம் நாம் செய்த உடன்படிக்கைக்கு எதிராக இருக்கும் காரியங்களையும், குறிக்கோளையும் நம்மைவிட்டு அகற்ற வேண்டும். அவரை துக்கப்படுத்தும் காரியங்களையும், பேச்சுக்களையும், செயல்களையும் நம்மைவிட்டு அகற்றவேண்டும்.

### கண்களின் இச்சைக்கு இடங்கொடுத்த தாவீது

நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து பரிசுத்தமாய் வாழ நம் தேவன் விரும்புகிறார். நம் இருதயம் சுத்தமாக இருக்கவேண்டும். தாவீது கர்த்தரை நோக்கி இப்படியாக ஜெபிக்கிறான்: **தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்** (சங்கீதம் 51:10). தாவீது, உரியாவின் மனைவியோடு பாவம் செய்தான். தன் கண்களின் இச்சைக்கு இடங்கொடுத்தான். இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும். பின் தான் செய்த பாவத்தை மறைக்க முயற்சி செய்தான். உங்கள் பாவம் உங்களை தொடர்ந்து பிடிக்கும். உரியாவை கொலை செய்தான். தான் செய்த பாவத்தை உணர்ந்தபோது, தேவனிடம் அறிக்கை செய்து மனந்திரும்பினான். நான் தேவனுக்கு எதிராக பாவம் செய்தேன் என்று கூறுகிறான்.

**தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவம் செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது, உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்** (சங்கீதம் 51:4). தாவீது, என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது, என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும் என்று ஜெபிக்கிறான். தேவன் நம் பாவங்களை மன்னிப்பதற்கு, நாம் செய்த பாவங்களை ஒத்துக்கொண்டு, அதை அறிக்கை செய்ய வேண்டும். பாவத்தை வெறுத்து மனந்திரும்ப வேண்டும். பாவங்கள் அருவருப்பானது. அது தேவனுக்கு விரோதமாகவும், மனுஷனுக்கும் விரோதமாக செய்யப்படுகிறது. நாம் பாவத்தை வெறுப்போம். தாவீதைப்போல கர்த்தரிடத்தில் நம்மைத் தாழ்த்தி மனந்திரும்புவோம்.

**இதோ உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்** (சங்கீதம் 51:6). நம் இருதயத்தில் உண்மையிருந்தாலே பரிசுத்தம் வந்துவிடும். நம் உள்ளத்தின் ஆழத்தில் உண்மை இருக்க வேண்டும். நாம் தனிப்பட்ட முறையில் தேவனுக்கு உண்மையாக இருக்கும்போது, நம் உள்ளத்திலிருந்து பரிசுத்தம் வெளிப்படும். நம்முடைய இருதயம் உண்மையாக இருக்க தேவன் விரும்புகிறார். நாம் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருந்தால், நம் இருதயம் கடினமாகி, பாவ உணர்வில்லாமல் இருப்போம். ஆனால், தாவீது பாவம் செய்து தேவனிடம் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டபின், மறுபடியும் அதே பாவத்தை செய்யவில்லை.

**அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்கு சம்பவித்தது** (2 பேதுரு 2:21-22). அநேகர் இரட்சிக்கப்பட்டு அபிஷேகத்தை பெற்ற பின்பும், முன்பு செய்துவந்த அதே பாவத்தை செய்து கொண்டிருப்பார்கள். **இவர்கள் கர்த்தருடைய வழியை விட்டு, விபச்சார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்** (2 பேதுரு 2:14). தேவனைப் பின்பற்ற மறுத்ததால், மாம்சம் விரும்பும் பாவங்களை தொடர்ந்து பின்பற்றுவார்கள். அதற்கு அடிமையாகி, தங்கள் மாம்சம் எதையெல்லாம் விரும்புவோ, அதையெல்லாம் செய்வார்கள். தேவனுக்கு முழுமையாக தங்களை அர்ப்பணிக்கும்போது, அடிமைப்படுத்தி வைத்திருக்கிற பாவத்திலிருந்து விடுதலை பெறலாம். தேவனே சுத்த இருதயத்தை எனக்குத் தாரும். எப்பொழுதும் உம்மிலே நிலைத்திருக்கிற ஆவியை எனக்கு தாரும் என்று தாவீது ஜெபிக்கிறான்.



இன்றைக்கும் அநேக ஊழியக்காரர்கள் மாம்ச இச்சையிலும், பண ஆசையிலும் விழுந்து கர்த்தர் தங்களுக்கு கொடுத்த தரிசனத்தை இழந்து முழுமையாக பிரகாசிக்க முடியாமல் ஏதோ ஓடிக்கொண்டேயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்குள்ளிருந்து முழுமையாக செயல்பட முடியாமல் அவர்களுடைய பாவமே தடையாயிருக்கிறது.

அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள், பணத்துக்காக, பதவிக்காக, புகழுக்காக ஊழியம் செய்வார்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றி அதிகமாகப் பேசாமல், தங்களைக் குறித்தே பெரிதாக பேசிக் கொண்டிருப்பார்கள். மாய்மாலம் செய்யாமல், கர்த்தருடைய வார்த்தையை பின்பற்றி போதிக்கிறவர்களே உண்மையான ஊழியக்காரர்கள்.

**அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து, உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிடிக்கும்படி, தங்களை காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள்** (எபேசியர் 4:18,19). சிலர் வீணான எண்ணங்களிலே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். தேவனை விட்டு விலகும் காரியங்களையே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். **அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து,**

**தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது** (ரோமர் *1:21*). சுத்த மனசாட்சியில்லாதவர்களாய், பொல்லாதவர்களாய் பிறரை ஏமாற்றுகிறவர்களாய், மோசம் போக்குகிறவர்களாய், சரியான வழியில் நடக்க மனதிலில்லாதவர்களாய், துணிகரமாய் பாவஞ்செய்கிறவர்களுமாய் இருப்பார்கள். பிறருடைய உணர்ச்சிகளையோ, துன்பங்களையோ கண்டு கவலைப்படாமல் கல்நெஞ்சம் கொண்டவர்களாக இருப்பார்கள். தனது கெட்ட செயல்களால் நேரக்கூடிய ஆபத்தான விளைவுகளைப்பற்றி எண்ணிப் பார்க்கமாட்டார்கள். தீய காரியங்களைச் செய்ய மேலும் மேலும் விரும்புவார்கள். அவர்கள் தங்கள் வெட்க உணர்வை இழந்துவிட்டனர். அப்போஸ்தலனாகிய பவுல் பழைய வாழ்க்கையில் செய்த பாவங்களை விட்டு மனந்திரும்பி புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளும்படி சொல்கிறார். பழைய பாவங்களை முழுமையாக விட்டு வெளியே வரும்படி கூறுகிறார். புதிய சுபாவத்தை உடையவர்களாய் புதிய எண்ணங்களை உடையவர்களாய் மாறவேண்டும். குறிக்கோள்களில் செயல்களில் மாறுதல் வேண்டும். இயேசு கிறிஸ்துவைப்போல அனுதினமும் மாறிக்கொண்டேயிருக்க வேண்டும்.

**அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்** (எபேசியர் *4:22-24*). பழைய வாழ்க்கை முறைகளை, பழைய தீய குணங்களை விட்டு புதிய இருதயமுள்ளவர்களாய் இயேசு கிறிஸ்துவைப்போல உண்மையுள்ளவர்களாய், நீதியுள்ளவர்களாய், பரிசுத்தமுள்ளவர்களாய் மாற வேண்டும். பொய் பேசாமல் இருக்க வேண்டும். **சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது** (எபேசியர் *5:31*). நாம் பிசாசுக்கு இடங்கொடாமல், தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாமல் இருக்கவேண்டும்.

**நாம் இனிப் பாவத்திற்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்திற்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே** (ரோமர் *6:6,7*). நம்முடைய பழைய பாவ வாழ்க்கை இயேசு கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டுவிட்டது. நமது பாவ தன்மைகளுக்கு நம்மேல் எந்த அதிகாரமும் இல்லை. இனிமேல் நாம் பாவங்களுக்கு அடிமையாக இருக்கமாட்டோம். நாம் பாவத்துக்கு மரித்தவர்களாகவும் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக எண்ண வேண்டும். சரீரங்களின் இச்சைப்படி, பாவத்துக்கு கீழ்ப்படிய அனுமதிக்கக்கூடாது. **சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக** (ரோமர் *6:12*).

**நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன் தன் சரீரபாண்டத்தை பரிசுத்தமாகவும், கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து**(*1* தெசலோனிக்கேயர் *4:3-5*).

அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுக்கு பிரியமான பரிசுத்த வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்று கற்பிக்கிறார். அனுதின வாழ்க்கையில் பாலியல் குற்றத்திற்கு விலகி பரிசுத்தமாய் இருக்கவும், சரீரத்தில் கட்டுப்படுத்தவும் கற்றுக் கொள்ள வேண்டும். நம் சரீரத்தை தூய்மையாய் வைத்திருக்கிறதைப் பார்த்து தேவன் மகிழ்ச்சியடைகிறார். அதன் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படும். தேவனை அறியாதவர்கள்தான் சரீரத்தைக் கட்டுப்படுத்தாமல், பாலியல் இச்சைகளுக்கு இடங்கொடுத்து, ஒழுக்கக்கேடாக நடக்கிறார்கள். நாம் நம் சரீரத்தை பரிசுத்தமாக காத்துக் கொள்ள வேண்டும்.

**நாம் பரிசுத்தமாய் வாழ்வதே தேவனுக்குப் பிரியமாயிருக்கிறது. தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்** (*1* தெசலோனிக்கேயர் *4:7*). கர்த்தர் தனக்கு கொடுத்த மனைவியை (கணவனை) விட்டு, இச்சைக்கு இடங்கொடுத்து, ஒழுக்கக்கேடாக நடந்து, தேவனுடைய நாமத்துக்கு மகிமை குறைச்சல் உண்டாக்குபவர்களை தேவன் தண்டிப்பார் (*1* தெசலோனிக்கேயர் *4:6*). அநேகர் இச்சையைத் தூண்டும் ஆபாசக்காட்சிகளை தொலைக்காட்சியிலும், இணைய தளங்களிலும் சென்று விருப்பத்தோடு பார்க்கிறார்கள் இவர்கள் தேவனோடு தனக்குள்ள உறவை முறித்து விடுகிறார்கள். தன் குடும்பத்திலுள்ளவர்களை வேதனைப்படுத்தி குடும்ப சமாதானத்தை கெடுக்கிறார்கள். கணவன் (மனைவி), பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனை அசட்டை பண்ணுகிறார்கள்.

**தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டை பண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான்** (*1* தெசலோனிக்கேயர் *4:7,8*). நாம் பாவத்தோடு வாழ்வதை தேவன் விரும்பவில்லை. பரிசுத்தமாய் வாழ்வதையே விரும்புகிறார். இந்த கட்டளைக்கு கீழ்ப்படிய மறுப்பவன் மனுஷனுக்கல்ல, தேவனுக்கு கீழ்ப்படிய மறுக்கிறான். கர்த்தர் நியமித்துள்ள திருமண உறவை விட்டு வெளியே வேறு உறவுகளை வைத்துக்கொள்வதினால், கர்த்தரோடு செய்த உடன்படிக்கையை மீறி கீழ்ப்படியாமல், சாபத்துக்குள்ளாகிறார்கள். தேவனுடைய ஆசீர்வாதத்தையும் இழந்து போகிறார்கள்.

ஊழியம் செய்பவர்கள்கூட விபச்சார வேசித்தன் பாவத்தில் விழுந்து, தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை கெடுக்கிறார்கள். இவர்கள் மறைமுகமாக தேவனுக்கு எதிர்த்து நிற்பவர்கள். மாய்மாலக்காரர்கள். சுயநலக்காரர்கள், துணிகரக்காரர்கள். தங்கள் இச்சையை நிறைவேற்ற எதை வேண்டுமானாலும் செய்வார்கள். இப்படிப்பட்டவர் களிடம் இயேசு கிறிஸ்துவின் அன்பு இல்லை. தேவ அன்பு அவர்களுக்குள் இருந்தால் எந்த ஸ்திரீயையும் இச்சையோடு பார்க்கமாட்டார்கள். எல்லா ஸ்திரீகளையும் தன் சொந்த சகோதரிகளைப்போலப் பார்ப்பார்கள். தன் சொந்த மகளையோ, தன் சொந்த சகோதரியையோ மற்ற ஆண்கள் இச்சையோடு பார்ப்பதை இப்பட்டவர்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பார்களா? இப்படிப்பட்டவர்கள் சுயநலத்தை விடும்போதுதான் பரிசுத்த வாழ்க்கை வாழ முடியும்.

**உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யாலாகாதே. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே. அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்** (*1* கொரிந்தியர் *6:15-18*).

பெண்களை தன் சொந்த சகோதரியைப்போலவும், திருமணமாகாத பெண்களை இன்னொரு நபருக்கு மனைவியாகப் போகிறவளாகவும்

பார்க்கவேண்டும். ஆபாசக் காட்சிகளில் வரும் பெண்களை தன் சொந்த சகோதரியைப் போலவும், மகளைப் போலவும் பார்க்காததினால்தான் துணிகரமாக இச்சையைத் தூண்டும் காட்சிகளைப்பார்த்து விபச்சாரம் செய்கிறார்கள். **ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ்செய்தாயிற்று** (மத்தேயு 5:28). அநேகர் இச்சை என்னும் பாவ உணர்வுக்கு இடங்கொடுத்து, அது தவறு என்று அறிந்திருந்தும், அந்தப் பாவத்தை விருப்பத்தோடே செய்கிறார்கள். அவர்கள் அழிவுக்கு நேராக சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் வெற்றியில்லாதவர்களாக, தோல்வியடைந்த நிலையில் இருப்பார்கள். **ஸ்திரீயுடனே விபச்சாரம் பண்ணுகிறவன் மதிகெட்டவன்; அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறான்.வாதையையும் இலச்சையையும் அடைவான்; அவன் நிந்தை ஒழியாது** (நீதிமொழிகள் 6:32,33). விபச்சாரம் செய்கிறவன் தன்னையே அழித்துக் கொள்வது மட்டுமல்லாமல், தன் மீது மற்றவர்கள் வைத்திருக்கிற மதிப்பையும் இழந்து போகிறான்.

### பாவத்தின் கவர்ச்சி - சிம்சோனின் வீழ்ச்சி

சிம்சோன் பிறந்ததிலிருந்து தேவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டவன். நசரேயனாக இருந்தான். தேவனுடைய பெலம் இவன் தலைமுடியில் இருந்தது. இஸ்ரவேலரை பெலிஸ்தியரின் கைக்கு நீங்கலாக்கி விடுவித்தான். இஸ்ரவேலில் இருபது வருடங்கள் நியாயாதிபதியாக இருந்தான். அவன் பெலிஸ்தியரில் ஒரு பெண்ணைக் கண்டு, அவளை திருமணம் செய்ய விரும்பினான். கர்த்தருடைய கட்டளைக்கு எதிராக எதிரிகளின் தேசத்திலுள்ள பெண்ணை விரும்பினான். பின் ஒரு வேசியைக் கண்டு அவளிடத்தில் போனான் (நியாயாதிபதிகள் 16:1). **வேசி ஆழமான படுகுழி** (நீதிமொழிகள் 23:27). அதற்குப்பின் தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான். பெலிஸ்தியரின் அதிபதிகள், சிம்சோனின் பெலம் எதினால் உண்டாயிருக்கிறது என்று அறியும்படி தெலீலாளிடம் கூறினர். சிம்சோன் மூன்றுமுறை தெலீலாளிடம் பொய் சொன்னான். மூன்று தடவையும், அவள் அவனை பெலிஸ்தியரிடம் காட்டிக் கொடுத்தாள். ஆனாலும், அவன் அவளை விட்டு ஓடிப்போகாமல், இச்சைக்கு அடிமையாயிருந்தான். நான்காவது முறை உன் மகாபலம் எதினால் உண்டாயிருக்கிறது என்று கேட்டாள். சிம்சோன் தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தினான். சவரன் கத்தி என்தலையின்மேல் படவில்லை, என் தலை சிரைக்கப்பட்டால் என் பலம் என்னைவிட்டுப் போகும் என்று





கூறினான். உடனே அவள் பெலிஸ்தியரின் அதிபதிகளை அழைப்பித்தாள். சிம்சோனின் ஏழு சடைகளையும் சிரைப்பித்தார்கள். அவன் பலன் அவனைவிட்டு போனது. பெலிஸ்தியர் அவனைப்பிடித்து, அவன் கண்களைப்பிடுங்கி, சிறைச்சாலையிலே மாவரைக்க வைத்தார்கள். மாம்ச இச்சைக்கு அடிமையாயிருந்ததால் தன் பலனை இழந்து போனான். நாம் கர்த்தரோடு இருக்கவும் விரும்பலாம் அல்லது நம் சுயவழியில் செல்லவும் விரும்பலாம். சிம்சோன் இச்சையில் மயங்கி, தெலீலாளோடு இருக்கவே விரும்பினான். அதன் பலனாக வந்த பின்விளைவுகளிலிருந்து அவனால் தப்பவிக்க முடியவில்லை. நம்முடைய வாழ்க்கையிலும் நாம் தேவனோடு நேரத்தை செலவழிக்காமல், மாம்ச இச்சையை நிறைவேற்றுவதற்கு இடங்கொடுத்தால் கர்த்தருடைய நியாயத் தீர்ப்பு வரும். மாம்ச இச்சைக்கும், உலகத்தில் உங்களைக் கவர்ந்து இழுக்கிற காரியங்களுக்கும் உங்களை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும்.

நாம் நம்மை பிரியப்படுத்தும்படி வாழாமல், கர்த்தரை பிரியப்படுத்தும்படி வாழ்வோம். நம் ஒவ்வொரு எண்ணங்களிலும் பேச்சிலும், செய்கையிலும் கர்த்தரை கனப்படுத்தி அவரை பிரதிபலிக்கிறவர்களாக இருக்கவேண்டும். கர்த்தர் கொடுத்த திருமண உறவில் களங்கம் ஏற்படுத்தாதபடி கர்த்தருக்கு பயந்து உண்மையாயிருக்க வேண்டும்.

மாம்ச சிந்தையில் இருப்பவன், தவறான வழியில் சென்று தேவனையும் அவரது வழிகளையும் புறக்கணித்துவிடுவான். நேர்மையற்ற வழியில் நடந்து மற்றவர்களை வஞ்சிப்பான். தவறான இரகசிய பாலியல் உறவினால் மற்ற சகோதரர்களை ஏமாற்றக் கூடாது. பரிசுத்தமில்லாமல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாமல் விபச்சார பாவத்தில் வாழ்கிறவர்கள் கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் விலக்கி வைக்கிறவர்கள் என்பதை புரிந்து கொள்ளலாம். உண்மையுள்ள மனுஷன் தன் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள உறுதியோடிருப்பான்.

### பரிசுத்தத்தைக் காத்துக் கொண்ட யோசேப்பு

யோசேப்புக்கு பாவம் செய்கிற சூழ்நிலை வந்தபோது, அந்த இடத்தை விட்டே ஓடிப்போனான். யோசேப்பு தேவனைப் பிரியப்படுத்தும்படி வாழ்ந்தான். போத்திபார் மனைவியுடன் பாவம் செய்ய மறுத்தான். **நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்** (ஆதியாகமம் 39:9). தன் பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டான். கர்த்தர் தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வோடு வாழ்ந்தான். நாம் எப்படியாக இருக்கிறோம்? பாவம் செய்து விட்டு ஒரு பாவமும் செய்யவில்லை



என்று பொய் சொல்லுகிறோமா? கர்த்தரை யாரும் ஏமாற்ற முடியாது. அப்படியென்றால் நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாக இருக்கிறோம். **பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும், விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு** (2 தீமோத்தேயு *2:22*).

தேவன் நம் ஒவ்வொரு பாவங்களையும் இருதயத்தின் எண்ணங்களையும் அறிந்திருக்கிறார். அவரிடம் நாம் செய்த பாவங்களை மறைக்க முடியாது. நாம் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, செய்த பாவத்தை ஒத்துக்கொண்டு, மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது நாம் பரிசுத்தமாகி விடுகிறோம். அநேகர் பாவமன்னிப்பை பெற்றுக் கொண்ட பின்பும் அதே பாவத்தை மறுபடியும் மறுபடியும் செய்து மன்னிப்பு கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்றால், **தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்; தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்** (நீதிமொழிகள் *28:13,14*). தாவீது, தான் செய்த பாவத்தை உணர்ந்து மன்னிப்பை பெற்றுக் கொண்டபின் அதே பாவத்தை அவன் திரும்பவும் செய்யவில்லை. அதைவிட்டுவிட்டான். அதனால் தேவனிடத்தில் இரக்கத்தைப் பெற்றுக் கொண்டான்.

சிலர் பாவம் செய்துவிட்டு செய்யவேயில்லை, பரிசுத்தமாய்தான் இருக்கிறேன் என்று சொல்லி மறைக்க முயல்வார்கள். பொய் சொல்வார்கள். தேவனுக்கு பயந்து வாழாமல் தங்கள் இருதயத்தை கடினப்படுத்துகிறவர்களோ துன்பத்திலேயே இருப்பார்கள். பெருந்தீங்கு விளைவிக்கும் ஒரு கொடிய நிகழ்வு அவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் அவர்களுடைய வாழ்க்கை வெற்றியுள்ளதாக, செழிப்புள்ளதாக இருக்காது. **நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்** (1 யோவான் *1:8,9*). பிரியமானவர்களே, நம்மிடத்தில் பாவமிருந்தால் அதை மறைக்காமல், ஒத்துக்கொண்டு, தேவனிடத்தில் அறியிடுவோம். மனந்திரும்புவோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். பாவம் செய்வதை நிறுத்துவோம். பாவம் செய்யமாட்டேன். பரிசுத்தத்தை காத்துக் கொள்வேன் என்று தீர்மானம் எடுப்போம். முட்டாள்கள்தான் அதே பாவத்தை திரும்ப செய்வார்கள்.

**கள்ள போதகர்கள்**

ஜனங்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டிய ஊழியக்காரர்கள், பாவங்களை மேலும் மேலும் விரும்பி, பெருமகிழ்ச்சியோடு, முழு ஈடுபாட்டோடு செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு எதிராக செயல்படுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கென்று கனமான ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் அதை மறந்து, கர்த்தரை மதிக்காமல், அவரை விட்டுப் பின்வாங்கிப்போனார்கள். வேசித்தன ஆவி அவர்களை வழித்தப்பித் திரியப்பண்ணிற்று (ஓசியா *4:12*). வேசித்தனமும் திராட்சரசமும் மதுபானமும் இருதயத்தை மயக்கும். வேசித்தன ஆவி அவர்களை தவறான பாதையில் செல்ல வைக்கிறது.

**நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே**



**நடக்கிறவர்களாயிருநந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம்** (1 யோவான் *1:6*). கர்த்தரோடு நெருங்கிய உறவு வைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவர்கள் தொடர்ந்து பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தால், அவர்கள் வார்த்தையை பின்பற்றி நடக்காதவர்கள் என்று அறிந்து கொள்ளலாம். ஒளியாகிய இயேசு கிறிஸ்து நமக்குள் வரும்போது, பரிசுத்த முள்ளவர்களாக, நேர்மையுள்ளவர்களாக, நீதியுள்ளவர்களாக, உண்மையுள்ளவர்களாக, தூய்மையுள்ளவர்களாக, நல்லொழுக்கமுள்ளவர்களாக, நம்பிக்கைக்குரியவர்களாக இருப்போம். அநீதி, ஒழுக்கமின்மை, பொய், அசுத்தம் ஆகிய பாவ இருள் நம்மைவிட்டு அகன்றுபோகும். தேவன் முழுமையான பரிசுத்தமுள்ளவராக, உண்மையுள்ளவராக இருக்கிறார். அவரே பாவத்தின் இருளிலிருந்து வெளியேவர உதவி செய்கிறார்.

சிலர் தேவனோடுகூட உறவு வைத்துக் கொண்டு, பாவத்தின் வழியிலும் சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மாம்ச இச்சைக்கு இடங்கொடுத்து, மாம்சம் விரும்புவதை நிறைவேற்றுவார்கள். ஒரே நேரத்தில் தேவனை நேசிக்கவும், பாவம் செய்யவும் முடியாது. **மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில் மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும்** (மாற்கு *7:20,21*). பாவத்தில் வாழ்பவன் மாம்ச இச்சையின்படி நடந்து, மனதும், மாம்சமும் விரும்பியபடி செய்வான். சாத்தானுக்கு பிரியமாய் இருந்து தேவனுக்கு எதிராக நடக்கிறான். **தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் சேருங்கள். அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்** (யாக்கோபு *4:7,8*). பிசாசு மனிதனை பாவத்தில் விழவைத்து, கர்த்தரிடமிருந்து விலக வைப்பதே அவனது நோக்கமாகும். **பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்** (எபேசியா *4:27*). பிசாசு பாவம் செய்ய தூண்டும்போது, தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற உறுதியோடு இருக்க வேண்டும். பிசாசை எதிர்த்து நிற்க வேண்டும். சாத்தானின் சகல வல்லமை யையும் மேற்கொள்ள கர்த்தர் நமக்கு அதிகாரத்தை கொடுத்திருக்கிறார் (லூக்கா *10:19*). இயேசுவின் நாமத்தினாலே நாம் சாத்தானை மேற்கொள்ளவேண்டும்.

மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் (ரோமர் *8:5,6*). மாம்சம் விரும்பியபடி செய்கிறவர்கள் தேவனுக்கு பிரியமாய் இருக்கமாட்டார்கள்; மாம்சத்தை கட்டுப்படுத்த ஆற்றல் இல்லாதவர்கள். ஆவியானவரைப் பின்பற்றி அவரை மையமாக வைத்து, அவருடைய வழி நடத்துதலின்படி வாழ்கிற வர்களின் வாழ்க்கை ஜீவனுள்ளதாயும், சமாதானமுள்ளதாயும் இருக்கும். வேதத்தை படிப்பதன்மூலம் அவருடைய வழிநடத்துதலைப் பெற்றுக் கொள்ளலாம். குழப்ப மான சூழ்நிலையிலும், இக்கட்டான வேளையிலும், நாம் என்ன செய்ய

வேண்டும் என்பதை பரிசுத்த ஆவியானவர் காட்டி, நம்மை சரியான பாதையில் வழிநடத்துவார்.

**வீழ்ச்சியடையாமல் எப்படி இருப்பது**

விசுவாசம்,. தைரியம், ஞானம் இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு ஆகிய இப்பண்புகள் நம்மில் பெருக வேண்டும். இப்பண்புகள் நமக்குள் இருந்தால் நாம் ஒருக்காலும் இடறிவிழமாட்டோம் (2 பேதுரு1:5-10). இவைகள் நம்மில் பெருக ஆவியானவரின் ஒத்தாசையை நாடுவோம். இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான் (2 பேதுரு 1:9). ஒவ்வொரு தேவபிள்ளையும் தன்னுடைய விசுவாசத்தையும் வாழ்க்கையையும் அடிக்கடி சோதித்து பார்த்து முன்னேற வேண்டும். முன்னேற முயற்சி செய்யாதவன் பின்மாற்றத்தில் இருக்கிறான்.

**மனுஷன் தனக்கு இருப்பவற்றில் திருப்தியடையவேண்டும். தேவன் கொடுத்தவற்றில் திருப்தி அடையாமல் அதிருப்தியோடு இருப்பது, இச்சைக்கும், பாவத்துக்கும் வழிநடத்துகிறது.** அப்போஸ்தலனாகிய பவுல் எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாக, மனதிருப்தியோடு வாழக்கற்றுக் கொண்டான். ஆவிக்குரியவற்றையே மேலானதாகப் பார்ப்போம். நாம் நம்மைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்தால், தேவனுடைய வழியை விட்டு விலகுகிறவர்களாயிருக்கிறோம். தேவனுக்கும், மனுஷனுக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவர்களாக இருக்கவேண்டும். **சுயநலத்தை விட்டு, பரிசுத்த ஜீவியத்தில் வளருவோம்.**

வானமும், பூமியும், அதிலுள்ள எல்லாம் அழிந்துபோகும். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! நீங்கள் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 3:11,14).

கர்த்தருடைய கிருபை உங்களோடு இருப்பதாக!

*உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?*

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-

வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

S.PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY

ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

எங்களது முகவரி : எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



முதலூரில்

# பரிசுத்த ஆவியின் வரங்கள்

## வல்லமை பயிற்சி முகாம் - 4வது அணி










ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த ஜனவரி மாதம் 14 முதல் 16 தேதி வரை முதலூரில் (திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் உள்ளது), பரிசுத்த ஆவியின் வரங்கள் குறித்ததான வல்லமை பயிற்சி முகாம் கர்த்தரின் பெரிதான கிருபையினால் நடந்தது. சுமார் 150 பேர் கலந்து கொண்டனர். காட்டாத்துறை பெத்தேல் மிஷன் சபை போதகர். காலேப் ஜெயக்குமார், வரங்களின் முக்கியத்துவம் பற்றியும், விசேஷமாக தீர்க்கதரிசன வரம் குறித்தும் பேசினார். ஜனங்களை வரங்களினால் முத்தரித்தார். சகோதரர். அகஸ்டின் ராஜசேகர், இந்த முகாமை முன்னின்று நடத்தினார். முகாமின் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார். அவரது குடும்பத்தினர், அவருக்கு உறுதுணையாக நின்றார்கள். போதகர் எட்வர்ட் (தூத்துக்குடி), போதகர். ராபின் (தூத்தூர்) மற்றும் போதகர் எபிநேசர் (குடிமங்கலம்), கர்த்தருடைய பிள்ளைகளை ஜெபத்தில் வழிநடத்தினார்கள். போதகர். கிளாரன்ஸ் மருதையா (திருநெல்வேலி) கடைசி நாள் முகாமில் கலந்து கொண்டு முகாமை சிறப்பித்தார்.

கர்த்தர், தம்முடைய வரங்களினால் ஜனங்களை அலங்கரித்தார். வரங்களைக் குறித்து விரிவாகப் போதிக்கக் கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார். அவருக்கே மகிமை உண்டாகட்டும்.

காட்டாத்துறை பெத்தேல் மிஷன் சபை போதகர்கள் ஜான்சன், ஏனோக்கு, மைக்கேல் மற்றும் பெர்னாடு ஆராதனை வேளைகளை சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். கர்த்தர், அவர்களையும் அவர்களது குடும்பங்களையும், ஊழியங்களையும் ஆசீர்வதிப்பாராக.

நல்ல இயற்கை சூழ்நிலையைத் தந்து, ஜனங்களுடைய பிரயாணங்களில் கூடஇருந்து பாதுகாத்து, தம்முடைய வரங்களைக் கற்றுத்தந்த கர்த்தருடைய நாமம் மகிமைப்படுத்துவதாக. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் அன்புடன்,

பால்ராஜ் கென்னடி

# ஆத்துமாவில் சுகம்

**- பால்ராஜ் கென்னடி**

**பி**ரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவான் 2). நமக்கு பணம், ஆஸ்தி, பதவி, வசதி வாய்ப்புகள் எல்லாம் இருந்தாலும் சரீரத்தில் சுகமாய் இருப்பது அவற்றிற்கெல்லாம் மேலான காரியமாகும். அதற்கும் மேலாக நமது ஆத்துமாவில் சமாதானமாய் இருப்பது மிகவும் அவசியமாகும். ஏனென்றால், வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும், நமக்குள் சமாதானமும், சந்தோஷமும் இல்லையென்றால், நம்மால் சுகமாய் (ஆத்துமாவில்) வாழ முடியாது.

அதற்கு நாம் செய்ய வேண்டியது, வேதத்தை இரவும், பகலும் தியானிக்க வேண்டும். அப்படி நாம் வேதத்தைத் தியானிக்கும்போது, வாழ்க்கையைப் பற்றியும், நம்மைப் பற்றியும், வாழ்க்கையில் நம்முடைய பங்கைப் பற்றியும் அறிந்தும், புரிந்தும் கொள்வோம். இந்த அறிவு, நமக்குள் நிதானத்தைத் தரும். வாழ்க்கையில் எது முக்கியம், எது முக்கியமில்லாதது, எது அவசியம், எது அவசியமில்லாதது, எது நிரந்தரம், எது தற்காலிகம், எதை நாம் முதன்மையாகக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொள்வோம்.

**தயாள குணமுள்ளவன் தயாளமானவைகளை யோசிக்கிறான், தயாளமானவைகளிலே நிலைத்தும் இருக்கிறான்** (ஏசாயா 32:8). நமது மனது விசாலமானதாக இருக்கவேண்டும். குறுகின மனப்பான்மை இருக்கக்கூடாது. மன மேட்டிமை, பொறாமை, பழிவாங்குதல், கசப்பு, எரிச்சல், கோபம் இருக்கக் கூடாது. இவைகளெல்லாம் நமது மனதை சுருங்கச் செய்துவிடும். நமது யோசனைகள் நல்லதாக இருக்க வேண்டும். நமது யோசனைகள்தான், நமது செயல்களாக மாறுகின்றன. நாம் எதை செய்கிறோமோ அதுவே நமது பழக்க வழக்கமாகின்றது. நமது பழக்க வழக்கம்தான் நமது குணமாகும். பணத்தைக் குறித்து யோசிக்க வேண்டும். ஆனால், அதையே எப்போதும் யோசித்துக் கொண்டிருக்கக்கூடாது. அநேகர் பணத்தை சேர்ப்பதிலேயே கவனமாய் இருப்பார்கள். மற்றும் பலர் கஞ்சத்தனமாய் இருப்பார்கள். சிக்கனமாய் இருப்பது நல்லது. அநாவசியமாய் செலவழிக்காமல் இருப்பது மிகவும் நன்று. ஆனால், தேவையானவற்றிற்கும்கூட செலவு செய்யாமல் காசை சேர்ப்பது, மனதை சுருங்கிப் போகச் செய்துவிடும். இப்படிப்பட்டவர்களால், எந்தக் காரியத்தைக் குறித்தும் தாராளமாக யோசிக்க முடியாது. ஏனென்றால் எல்லாவற்றையும் குறித்து யோசிக்க வேண்டிய மனதை அவர்களது கஞ்சத் தனம் சுருங்கிப்போகச் செய்து விட்டது. ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு மனது கிடையாது. எல்லாக் காரியங்களுக்கும் ஒரே மனதுதான். அது விசாலமானதாய் இருப்பது அவசியம்.

**வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரணகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்** (நீதிமொழிகள் 11:24,25). நிலத்தில் விதை விதைக்கிறவன், அவைகளை எண்ணிப் பார்த்து விதைப்பதில்லை. தன் கைகளில் அகப்பட்டதை வாரியிறைப்பான். அப்படிப்போல நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது தாராளமாய் கொடுக்க வேண்டும். இது நமது மனதில் விசாலத்தை உண்டாக்கும். நாம் கொடுத்தால் நமக்குக் குறைந்து போகும் என்பது உலகத்தின் கணக்கு. ஆனால், நாம் கொடுக்கும்போது, நமக்குக் கூடக் கொடுக்கப்படும் என்பது கர்த்தருடைய ராஜ்யத்தின் கணக்கு. நாம் தாராளமாய் கொடுக்கும்போது, மற்றவர்களுக்கு உதவி செய்யும்போது நமது ஆத்துமாவில் சந்தோஷம் உண்டாகும். இதுவே ஆத்துமாவில் செழிப்பு உண்டாவதாகும். நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது, கர்த்தர் நமக்குக் கொடுப்பார்.

**ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்** (நீதிமொழிகள் 19:17). நாம் கொடுக்கும்போது கவனமாய் இருக்கவேண்டும். நாமாக சுயமாக நடக்கக்கூடாது. நமது கையிலிருக்கும் பணத்திற்கும், பொருளுக்கும் எஜமானன் நாம் அல்ல. கர்த்தரே எஜமானன். நமக்கும் நாம் எஜமானன் அல்ல. நாம் கர்த்தருக்கு சொந்தமானவர்கள். கர்த்தர் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அவர்களுக்குத்தான் நாம் கொடுக்க வேண்டும். கர்த்தர் யாரை ஆசீர்வதிக்க நினைக்கிறாரோ அவர்களுக்கு நம்மைக் கொடுக்க வைப்பார். அப்போதுதான் நம்மை அவர் ஆசீர்வதிக்க முடியும். நாம் இஷ்டம்போல கொடுக்கும்போது, பெற்றுக் கொள்கிறவர்களுக்கும், கொடுக்கும் நமக்கும் கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதம் கிடைக்காது.

**வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்** (சங்கீதம் 112:9). இங்கேயும் ஏழைகளுக்குக் கொடுப்பதையே கர்த்தர் குறிப்பிடுகிறார். அப்படி நாம் கொடுக்கும்போது கர்த்தர் நம்மை உயர்த்துவார்.

**மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** (மத்தேயு 25:40). நாம் இந்தப் பூமியில் ஏழைகளுக்குக் கொடுக்கும்போது, பரலோகத்திலிருந்து கர்த்தர் அதற்கான பலனைக் கொடுக்கிறார்.

இவை எல்லாவற்றிலிருமிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, கொடுப்பது என்பது நமது உள்ளார்ந்த மனுஷனிலுள்ளக் காரியமாகும். நமது ஆத்துமா விசாலமாக இருக்கும்போதே சுகம் சாத்தியப்படும். நமக்குள் அன்பு, சந்தோஷம், சமாதானம் இருப்பது நமது ஆத்துமாவை சுகமாக்கும். ஆமென்!